பேர்நாயக்கன்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை: திருமதி.M.பாண்டியம்மாள்

01/2024

நாள்: 19.02.2024

பொருள்: விருதுநகர் மாவட்டம் - வெம்பக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் - பேர்நாயக்கன்பட்டி ஊராட்சி - பேர்நாயக்கன்பட்டி கிராமம் சர்வே எண்: 33/2, 34/1, 34/2A, 35/1B1, 35/2A, 35/3A, 35/4-ல் 27160 ச.மீ (6.71 ஏக்கர்) தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது - கட்டணங்கள் செலுத்தப்பட்டது - மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கி - உத்தரவிடல்.

பார்வை: 1. மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், விருதுநகர் மாவட்டம், அவர்களின் கடிதம் ந.க.எண். 0G76IKW7/ 2024/TCP, நாள்: 14.02.2024.

2. மனுதாரர் திரு.A.ராஜேந்திரன் அவர்களின் விண்ணப்பம், நாள்: 15.02.2024.

உத்தரவு

வெம்பக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், பேர்நாயக்கன்பட்டி ஊராட்சி, பேர்நாயக்கன்பட்டி கிராமம் சர்வே எண்: 33/2, 34/1, 34/2A, 35/1B1, 35/2A, 35/3A, 35/4-ல் 27160 ச.மீ (6.71 ஏக்கர்) பார்வை (1)ல் காணும் கடிதம் வாயிலாக தொழில்நுட்பம் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி மனைநிலத்தில் அமைந்துள்ள கூராய்வு கட்டணமும் மற்றும் பார்வை 3-ல் காணும் கடிதத்தின்படி இடத்தின் சந்தை மதிப்பு ஏக்கருக்கு 3% நிலப்பயன் மாற்றக் கட்டணமும் பெற்றுக் கொண்டு இறுதி ஒப்புதல் வழங்குமாறு கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, செலுத்தப்பட வேண்டிய கூராய்வு கட்டணம் ரூ.1000/- வீதம் 6.71 ஏக்கருக்கு ரூ.7000/-ம் மற்றும் சந்தை மதிப்பு ஏக்கருக்கு 3% என்ற அடிப்படையில் நிலப்பயன் மாற்றக் கட்டணமாக ரூ.42499/-ம் ஊராட்சி பொதுநிதிக் கணக்கில் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது. எனவே, மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

சர்வே எண்கள்	மனைப்பிரிவு எண்கள்	மனைப்பிரிவு எண்ணிக்கை	மொத்தப் பரப்பளவு
பேர்நாயக்கன்பட்டி கிராமம் சர்வே எண்கள்: 33/2, 34/1, 34/2A, 35/1B1, 35/2A, 35/3A, 35/4	1 முதல் 122 வரை மற்றும் 01	123	6.71 ஏக்கர் (27160 ச.மீ)

நிபந்தனைகள்

1) பொதுபயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட்ட மனுதாரர் பத்திரப்பதிவு செய்து கொடுத்த இடங்களை தனது சொந்த பொறுப்பில் அரசின் பெயரில் பட்டாமாறுதல் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

2) மனுதாரர் பொதுபயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் கட்டுமானம் ஏதும் மேற்கொள்ளக் கூடாது. பொதுபயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் கம்பிவேலி அமைக்கப்பட வேண்டும்.

(தபிபா)

3) தனிமனைகள் குறித்து நிலஉரிமம் மற்றும் மனை அளவுகள் விபரம் குறித்த முழுமையான ஆவணங்கள் வழங்கப்பட வேண்டும். மேலும் அவற்றில் ஏதேனும் குறைபாடுகளோ முறைகேடுகளோ தெரியவரும்பட்சத்தில் மேற்படி உத்தரவு எந்தவித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.

4) மனைப்பிரிவு அமைந்துள்ளஇடத்தில் மண்சாலை அல்லது தார்சாலை அமைக்க வேண்டும்.

மு.பாண்டியமகாராஜன்

தலைவர்,
பேர்நாயக்கன்பட்டி ஊராட்சி

இணைப்பு:
மனைப்பிரிவு அங்கீகார வரைபடம் மற்றும் சிறப்பு நிபந்தனைகள்

பெறுநர்:
1.திரு.A.ராஜேந்திரன்,
2/752, பிள்ளையார்கோவில் தெரு,
சித்துராஜபுரம், சிவகாசி-626189.
விருதுநகர் மாவட்டம்.

நகல்:
1.துணை இயக்குநர், மாவட்ட ஊரமைப்பு அலுவலகம், விருதுநகர்.
2.மாவட்ட பதிவாளர், பத்திரப்பதிவு அலுவலகம், விருதுநகர்.
3.மாவட்ட ஆட்சியர் (ஊராட்சிகள் பிரிவு), விருதுநகர்.
4.சார்பதிவாளர் அலுவலகம், சிவகாசி.